# DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 326/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனிவாசபிரபு | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | வெங்கடாசலம் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

முதல் விசாரணை

நான் உடுமலைப்பேட்டை தாராபுரம் ரோட்டில் சேரன் நகரில் வசித்து வருகிறேன். ஏர்டெல் நிறுவனத்தின் எரிக்சன் கம்பெனியில் பொறியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 21.03.2025 ம் தேதி மாலை 7.00 மணிக்கு நானும் என் மனைவி மற்றும 2 குழந்தைகளுடன் ஊட்டி சென்று சுற்றி பார்ப்பதற்காக சென்றுவிட்டோம். 24.03.2025 ம் தேதி விடியற்காலை 2.00 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். வீட்டின் கேட்டை திறந்து உள்ளே சென்று போய் பார்த்த போது மெயின் டோர் திறந்து கிடந்தது. கதவை பார்த்த போது ஓரமாக உடைந்து கிடந்தது. வீட்டிற்குள் உள்ளே செல்லவில்லை.100 க்கு போன் செய்தோம். மாஸ்டர் பெட்ரூமில்இருந்த பீரோ திறந்து துணிகள் எல்லாம் கட்டில் மேல் கொட்டி கிடந்தது. wall roof பீரோவில் வைத்திருந்து எனது குழந்தைகளின் கொலுசு– 2 செட் மனைவியின் வெள்ளி கொலுசு – 2 செட் குழந்தையின் சோறுட்டும் வெள்ளி கிண்ணம்–1 சவெள்ளி ஸ்பூன் –1 குங்குமசிமிழ்–1 சந்தன கிண்ணம் –1 ஆகிய வெள்ளி பொருட்கள் திருடுபோனது. இன்னொரு ஸ்டில் பீரோவில் ரூ .5000/– பணமும் திருடுபோயிருந்தது. பின்னர் தடயஅறிவியல் துறையில் வந்து

பார்த்தார்கள். மறுநாள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும்புகார் நான் எழுதி யது நான் தான். நான் தான் புகார் கொடுத்தேன். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. 10–15 நாட்கள் கழித்து சுப்பிரமணி (எ) திவான் என்பவர் திருடி இருப்பதாக எங்களது பொருள்களை அடையாளம் காட்ட சொல்லி காவல் நிலையம் அழைத்தார்கள். நான் சென்று அடையாள்ம காட்டினேன். வெள்ளிபொருட்கள் அனைத்தும் இருந்தது நான் சென்று அடையாளம் காட்டினேன். பணம் ரூ 5000/– கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நகைகளை கனம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வெள்ளி பொருட்கள் தான் எங்களுடையது. புகைப்படம் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. காணாமல் போன வெள்ளி பொருட்களின் பில்களை காவல் துறையிலலும் நீதிமன்றத்திலும் தாக்கல செய்யவில்லை என்றால இல்லை அது அனைத்து பழையதாக எடுத்த நகைகள். புகாரை யார் எழுதியது என்றால் எனது மனைவி. புகாரில் உங்களது மனைவி எழுதியதாகவும் அதில் கையெழுத்து செய்ததாகவும் வாசகங்கள் இல்லை என்றால் ஆமாம். வெள்ளி பொருட்கள் வெள்ளி பொருட்கள் டிசைன்கள் மாடல் சொல்லவில்லை என்றால் குங்குமச்சிமிழ் சந்தன கிண்ணம் என்று சொன்னேன். வெள்ளி கொலுசின் டிசைன் சொல்லவில்லை என்றால் ஆமாம்.
2. வெள்ளி பொருட்களை காவல் நிலையத்தில் அடையாளம் காட்டியதாக சொல்லி உள்ள நிலையில் இப்பொழுது காட்டினீர்கள் என்றால் மாலையில் காட்டினேன் எத்தனை மணி இருக்கும் என்றால் 5.30–6.00 இருக்கும். என்றைய தினம் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் ஆமாம் வீட்டுக்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது என்றால் இல்லை சிறிது திறந்த வெளியாக இருக்கும், அருகில் மிக அருகில் வீடுகள் இல்லை ராம் வீடு, ராஜலக்ஷ்மி வீடு, கணேஷ் வீடு ஆகியவைகள் இரண்டு சைட்டுகள் தள்ளி உள்ளது.
3. பீரோவை உடைத்தது போல் இல்லை என்றால் ஸ்டீல் பீரோ உடைந்து இருந்தது Wall roof இருந்ததை சாதாரணமாக மூடி விட்டு சென்று இருந்தோம். புகார் கொடுத்து எத்தனை மணி நேரம் கழித்து காவல்துறையினார்கள் வந்தார்கள் என்றால் 100 க்கு போன் செய்ததும் 10– 20 நிமிடத்தில் அவர்கள் வந்து விட்டார்கள். மீண்டும்

அதிகாலையில் 4.30– 5.00 மணிக்கு வந்தார்கள். பின்னிட்டு உடனே காவல்நிலையம் செல்லவில்லை என்றால் ஆமாம், மறுநாள் வேலை நாள் திங்கட்கிழமை என்பதால் பணிக்கு சென்று விட்டு மாலையில் தான் பணி முடித்துவிட்டு புகார் கொடுத்தேன்.

4. அதிகாலை 4.30 மணி அளவில் வந்ததாக சொல்லி உள்ள நிலையில் அதன் பின்னிட்டு பின்னிட்டு போலீஸ் விசாரித்தார்களா என்றால் மறுநாள் கேமரா உள்ளதா என வந்து விசாரித்தார்கள் சிசிடிவி கேமரா எங்கெங்கு உள்ளது என விசாரித்தார்கள்.
5. சாட்சி பட்டியலில் அபிநயா உங்களது மனைவி என்றால் ஆமாம். ராம்குமார் யார் என்றால் எனது வீட்டுக்கு அருகில் வசிப்பவர். கார்த்திக் குமார், கணேஷ், ஜெகநாதன் ஆகியோர்கள் தெரிந்தவர்கள் என்றால் ஆமாம். கார்த்திக் முகமது சபீர் தெரியுமா என்றால் தெரியாது.
6. புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் புகார் யார் வாங்கியது என்றால் எஸ் ஐ வாங்கினார். எந்த சூழ்நிலையிலும் நீங்கள் ஆய்வாளரை பார்க்கவில்லையா என்றால் கேமரா ஃபுட்டேஜ் பார்க்க இன்ஸ்பெக்டர் வந்திருந்தார், ஒரு டீம்மாக வந்தார்கள் அதில் இன்ஸ்பெக்டர் வந்தார்.
7. அதற்கு பின்னிட்டு உங்களை எப்பொழுதும் விசாரிக்கவில்லை என்றால் ஆமாம். அந்த மூன்று நாட்களில் எந்த காலகட்டத்தில் திருடு போனது என்று உங்களுக்கு தெரியாது என்றால் ஆமாம். நீங்கள் ஊட்டிக்கு செல்லும் விவரம் அங்கு அருகில் குடியிருப்பவர்களுக்கு தெரியும் என்றால் தெரியாது நீங்கள் இரண்டு மூன்று நாட்கள் போகும் நிலையில் அக்கம் பக்கத்தில் பார்த்துக் கொள்ள சொல்லியோ நண்பர்களிடம் பார்த்துக் கொள்ள சொல்லிகள் செல்லவில்லையா என்றால் ஆமாம் உங்கள் பகுதிக்கு பால்காரர், காய்க்கறிகாரர், இருப்பவர்கள் வந்து செல்வார்கள் என்றால் ஆமாம்.
8. உங்களது வீடு கதவு உடைக்கப்பட்டதாக சொல்லி உள்ள நிலையில் கதவு உயர் ரக பாதுகாப்பபான ஹெவி லோட் என்றால் ஆமாம், போர் ஸ்டேட் கொண்ட பூட்டு ஆகும். அதனை உடைக்கும் பொழுது பெரிய சத்தம் வர வாய்ப்பு உண்டு என்றால் தெரியவில்லை. ஒரு தனிப்பட்ட நபரால் ஹெவியான டோரை உடைக்க சாத்தியமில்லை என்றால் தெரியாது அருகில். வீடுகள் அருகில் இருந்தால் சத்தம் கேட்கும் எங்கள் வீட்டின் அருகில் வீடுகள் தள்ளி தள்ளி உள்ளது. ராம் என்பவரின் வீடு இரண்டு சைட் தள்ளி என்றால் அவர்கள் வீடு வடக்கு பார்த்த வீடு இரண்டு சைட் தள்ளி உள்ளது. வடக்கு வாசல் பார்த்தா தெரியாது. மேற்படி திருடானது தெரிந்த நபர்கள் அல்லது

அருகில் உள்ளவர்களால் ஏற்பட்டிருக்கலாம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் கிடையாது என்றால் சரியல்ல

9. எதிரியின் பெயரை நீங்கள் தற்போது போலீசார் சொல்லியதன் பெயரில் தெரியும் என்றால் நான் மனு தாக்கல் செய்த பொழுது பெயர் கேட்டு தெரிந்து கொண்டேன். யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டீர்கள் என்றால் போலீசார் இடம் கேட்டு தெரிந்து கொண்டேன். நீதிமன்றத்தில் இருந்து பெற்று நகைகள் உங்களுடைய அல்ல என்றாலும் நீங்கள் காவல்துறையின் சொன்னதன் பேரில் உங்களுடைய நகை என்று சொல்கிறீர்கள் என்றால் எனது நகை தான். சொன்ன நேரத்தில் சொன்ன மாதிரி புகார் கொடுக்கவில்லை என்றாலும் சொன்ன மாதிரி போலீசார் உங்களை விசாரிக்கவில்லை என்றாலும் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 326/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேஷ் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பொன்ராஜ் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 23.07.2025.

முதல் விசாரணை

நான் உடுமலை சேரன் நகரில் வசித்து வருகிறேன். பிரைவேட் கம்பெனியில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2025 ம் தேதி யன்று போலிசார் மதியம் 1.00–1.30 மணியளவில் சேரன் நகரில் என் வீட்டின் அருகில் போலிசார் நின்று கொண்டிருந்தார்கள் கூட்டமாக இருநத்தால் நான் சென்று பார்த்தேன். என்னிடமும் விசாரித்தார்கள். பக்கத்து வீடான சீனிவாசபிரபு வீட்டில் திருடுபோனதாக சொன்னார்கள் இடத்தின் அடையாளம் கேட்டார்கள் நான் தான் சொன்னேன். போலிசார் வரைபடம் வரைந்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள் விவரங்கள் தெரிந்து கொண்டு கையொப்பம் செய்தோம். நானும் மறறொருவரும் கையொப்ப்ம செய்தோம், மற்றொருவர் பெயர் தெரியாது. எனது வீடு ராம்குமாரின் வீடு, ராஜாத்தியம்மாள் வீடு ஆகிய வீடுகளை அடையாளம் காட்டினேன். என்னிடம் காட்டபபடும் பாரவை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறிது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. தனியார் நிறுவனத்தில் வேலை நேரம் என்ன என்றால் 8.30

லிருந்து 5.30 மணி வரை. வேலை நேரம் 5.30 மணி வரை என்பதாதல் அந்த சமயத்தில் வர வாய்ப்பே இ்லை எனறால் நான் மதியம் சாப்பாட்டிற்காக வந்தேன். சாப்பாட்டிற்காக வந்ததை போலிசார் விசாரைணையில்சொல்லவில்லை என்றால் அது பற்றி அவர்கள் கேட்கவில்லை. சினிவாசபிரபு உங்க்ள் பக்கத்து வீட்டுகாரர் என்றால் அமாம்.நீஙகள வந்த சமயத்தில் அவர் அங்க இருந்தார் என்றால் ஆமாம். சீனிவாசன் அன்றைய தினம் பணிக்கு சென்றுவிட்டார் என்றாலும் வழககிற்காக பொய்யாக சொல்கிறிர்கள் என்றாலும் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து செய்திர்கள் என்றால் எழுதிய போது கையெழுத்து போட்டன். கையெழுத்து போட்ட ஆவணத்தில உள்ள விவரம தெரியாது எனறால் நான் சொல்லியதை தான் அவர்கள் எழுதினார்கள். நான் கையெழுத்து போட்டேன். சீனிவாசன் பக்கத்து வீட்டுகாரர் என்பதாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்கவும் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டு விட்டு தற்சமயம் சம்பவ இடத்தில் வைத்து போட்டதாக பொய்யாக சாட்சியம்அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakal B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.